பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 09 2024 **TUESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில், குறைந்தபட்ச ஆதரவு விலையில் சோயாபீன் கொள்முதல் செய்யப்படும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
- புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டுள்ளதற்கு மருத்துவம் மற்றும் தொழில்துறையினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்
- வளரும் நாடுகளின் உண்மையான பங்களிப்பை ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் அங்கீகரிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.
- தமிழகத்தில் **Jabil** மற்றும் ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனங்கள் தொழில்களை தொடங்கும் வகையில் 2 ஆயிரத்து 666 கோடி ரூபாய் முதலீட்டுக்கான ஒப்பந்தம் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.
- சிங்கப்பூர் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில், குறைந்தபட்ச ஆதரவு விலையில் சோயாபீன் கொள்முதல் செய்யப்படும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் செய்தியாளர்களிட் பேசிய அவர், குறைந்தபட்ச ஆதரவு விலையை விட ஏதேனும் தானியங்கள் விலை வீழ்ச்சி பெற்றால், குறைந்தபட்ச ஆதரவு விலையில் அதனை கொள்முதல் செய்யும் சிறப்புத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது என்று தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் சோயாபீன் விவசாயிகளின் இழப்பை ஈடு செய்ய வேண்டும் என்று மத்தியப்பிரதேசம் மற்றும் கர்நாடக மாநில அரசுகள் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

சோயாபீன் குறைந்தபட்ச ஆதரவு விலை தற்போது குவிண்டாலுக்கு 4 ஆயிரத்து 894 ரூபாயாக உள்ளது.

>>>>><<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று ஜெர்மனி செல்கிறார்.

இந்த பயணத்தின் போது அந்நாட்டு வெளியுறவு அமைச்சரை பெர்லினில் சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேச்சு நடத்துக்கிறார்.

அடுத்த மாதம், ஜெர்மன் அதிபர் **Olofscholz** இந்தியாவிற்கு வருகைதரவுள்ள நிலையில் அமைச்சரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

>>>>><<<<<

புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டுள்ளதற்கு, மருத்துவம் மற்றும் தொழில்துறையினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற 54வது சரக்கு மற்றும் சேவை வரி குழுமக் கூட்டத்தில், புற்றுநோய்க்கான முக்கிய மருந்துகளின் வரி விகிதம் 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டது.

இந்த முடிவு இந்நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவோருக்கு மிகப் பெரிய ஆறுதலாக அமைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், புதிய ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை முறைகள் அறிமுகப்படுத்தபடுவதுடன், இதுபோன்ற விலை குறைப்பு அவர்களுக்கு மிகுந்த பயனை அளிக்கும் என்றும் மருத்துவம் மற்றும் தொழில்துறை வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

>>>>><<<<<

இந்தியா – பிலிப்பைன்ஸ் கூட்டு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்கு குழுவின் 5வது கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெறும் இக்கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சக செயலர் திரு. கிரிதர் அரமனே பங்கேற்கிறார்.

இந்தியாவின் கிழக்கு நோக்கிய செயல்பாடுகள் கொள்கையின் 10வது ஆண்டு மற்றும் பிலிப்பைன்ஸ் உடனான 75 வருட ராஜீய உறவு நிறைவுறும் தருவாயில் இந்தக் கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் இருநாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து இருநாட்டு தலைவர்களும் விவாதிக்கவுள்ளனர்.

>>>>><<<<<

மகாராஷ்ட்டிரா முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான கட்சியே உண்மையான சிவசேனா என்று அம்மாநில சட்டப்பேரவை தலைவர் எடுத்த முடிவுக்கு எதிரான மனு உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது.

சிவசேனா உத்தவ் தாக்கரே பிரிவைச் சேர்ந்த திரு. சுனில் பிரபுஇந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

தலைமை நீதிபதி திரு. டி.ஒய். சந்திசூட் தலைமையிலான அமர்வு,முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே மற்றும் அவரது பிரிவின் 38 சட்டப்பேரவை உறுப்பினர்கள் இவ்வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று கடந்த ஜனவரி மாதம் உத்தரவிட்டிருந்தது.

>>>>><<<<<

மேற்குவங்க மாநிலத்தின் சுகாதார அமைச்சகத்தின் செயலர் உள்ளிட்ட உயரதிகாரிகளை பதவிநீக்கம் செய்யக்கோரி, அம்மாநில இளநிலை மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ஜிகர் மருத்துவமனையின் கருத்தரங்கு கூடத்திற்கு அருகில் உள்ள கட்டிடத்தை இடிக்க உத்தரவிட்ட நடவடிக்கையை எதிர்த்து, அவர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இவர்களையும் கொல்கத்தா மாநகர வடக்கு மண்டல துணை ஆணையரையும் பெண் பயிற்சி மருத்துவர் கொலை வழக்கில், சிபிஐ சேர்க்க வேண்டும் என்று இளநிலை மருத்துவர்கள் கோரியுள்ளனர்.

>>>>><<<<<

வளரும் நாடுகளின் உண்மையான பங்களிப்பை ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் அங்கீகரிக்க வேண்டும் என்று ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. பர்வதனேனி ஹரிஷ் கூறியுள்ளார்.

இதுகுறித்து, அக்குழுவின் கூட்டத்தில் உரையாற்றிய அவர், கடந்த 70 ஆண்டுகளில் இரண்டரை லட்சத்திற்கும் மேலான இந்திய வீரர்கள், 50க்கு மேற்பட்ட நாடுகளில் அமைதிப் படையில் பணியாற்றியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக இப்பணியில் ஈடுபட்ட 182 வீரர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளதாகவும், இப்பணிக்கு இந்தியா எப்போதுமே உதவிக்கரம் நீட்டியுள்ளதாகவும், இதுபோன்ற பங்களிப்புகளை கருத்தில் கொண்டு இக்குழுவின் நிரந்தர உறுப்பினர்களுக்கான நெறிமுறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்றும் திரு. பர்வதனேனி ஹரிஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் **Jabil** மற்றும் ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனங்கள் தொழில்களை தொடங்கும் வகையில், 2 ஆயிரத்து 666 கோடி ரூபாய் முதலீட்டுக்கான ஒப்பந்தம், முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

சிகாகோவில் **Jabil** நிறுவனத்துடன் 2 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி திருச்சியில் மின்னணு சாதனங்கள் உற்பத்தி நிறுவனம் அமையவுள்ளது.

ராக்வேல் ஆட்டோமேஷன் நிறுவனம் காஞ்சிபுரத்தில் உள்ள தொழிற்சாலையை 666 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யவும் இந்த ஒப்பந்தம் வகைசெய்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 5 ஆயிரத்து 365 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மென்பொருள் தயாரிப்பு மற்றும் சேவைகளை வழங்கி வரும் ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் மேலும் ஒரு ஒப்பந்தம் முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்தானது.

இளைஞர்களின் திறன் மேம்பாடிற்கும், குறு, சிறு, நடுத்தர தொழில்நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் உள்ளிட்ட தொழில் துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

>>>>><<<<<

தமிழகத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று தொடங்கின.

சிவகங்கை மாவட்டத்தில் இப்போட்டிகளை மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இதேபோல், மாவட்ட தலைநகரங்களில் இப்போட்டியை மாநில அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்.

நாமக்கல் மாவட்டத்தில் இப்போட்டியில் 31 ஆயிரம் பேர் பங்கேற்றுள்ளனர்.

இப்போட்டி 24ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

>>>>><<<<<

30-வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி கிருஷ்ணகிரியில் வரும் 13ஆம் தேதி தொடங்குகிறது.

இம்மாவட்டத்தில் அதிக அளவில் மாங்கனி விளைச்சல் கிடைப்பதை அடுத்து, ஆண்டுதோறும் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

இதில் சிறந்த ரகம், சிறந்த உற்பத்தியாளர் உள்ளிட்ட விருதுகள் வழங்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜா 25 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தெற்கு காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 40 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர்.

தெற்கு காஸாவில் அமைந்துள்ள கான்யூனிஸ் பகுதியில் வீடுகளை இழந்தோர் தங்கவைக்கப்பட்டிருந்த முகாம் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், 40க்கும் மேலான உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் பாலஸ்தீன அரசு தெரிவித்துள்ளது.

60க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கான்யூனிஸ் பகுதியில் ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் ராணுவ செய்தி தொடர்பாளர் **Avichay Adree** தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஆஸ்திரேலியாவில் சமூக ஊடகங்களை குழந்தைகள் பயன்படுத்த தடை விதிக்கும் சட்டம் கொண்டுவரப்படும் என்று அந்நாட்டு பிரதமர் திரு. ஆண்டனி அல்பனிஸ் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் அச்சுறுத்தல் மிகுந்ததாக இருப்பதாகவும், குழந்தைகளை அவர்களின் உண்மையான நண்பர்களிடமிருந்து அந்நியப்படுத்தி, ஊறுவிளைவிப்பதாகவும் அறிக்கை ஒன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் 16 வயது நிரம்பியவர்களே சமூக ஊடகங்களை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்றும் இதுகுறித்து விரிவான கருத்துக்கேட்பு நடைமுறை மேற்கொள்ளப்படும் என்றும் திரு. ஆண்டனி அல்பனிஸ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

சிங்கப்பூர் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், 6-3, 6-2 என்ற செட்கணக்கில் சகவீராங்கனை **Akankasha Dileep-**ஐ வென்றார்.

**>>>>><<<<<**

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் ருதுபர்ன பாண்டா - ஸ்வேதா பர்ணபாண்டா இணை - தைவான் இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை, யுக்ரைனின் **Polinea – Yevheniia** இணையை எதிர்கொள்கிறது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் சித்தானந்த் குப்தா, **Alap Mishra, Satishkumar, Mithun Manjunath** உள்ளிட்ட வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

**>>>>><<<<<**

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா இன்று ஜப்பானின் **Ayano Shimizu-**வை எதிர்கொள்கிறார்.

**>>>>><<<<<**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்று, தில்லி திரும்பிய இந்திய வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய வீரர்களுக்கு பூங்கொத்து அளித்து வரவேற்கப்பட்டது.

பாராலிம்பிக் போட்டியில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்திய அணியினர் 7 தங்கம், 9 வெள்ளி, 13 வெண்கலம் உட்பட 29 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

>>>>><<<<<